[1982 மார்ச் 3

சோழவந்தான் குடிநீர் திட்டம்.

வினா எண். 330. திரு. ஏ. சந்திரசேகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தானில் 19—11—1979-ல் வைகை வெள்ளத்தில் குடிநீர் பம்பிங் ஸ்டேஷன் குழாய் பழுது அடைந்து அதை மத்திய அரசு நிவாரண பணிக்குழுவும் மாநில நிவாரண பணிக்குழுவும் பார்வையிட்ட வெள்ள நிவாரண பணியில் சேர்த்து பழுது பார்த்து கொடுக்கப்படும் என்று அரசு உறுதி மொழி அளித்தது உண்மையா ?

(ஆ) ஆம் என்றால் உடனடியாக சோழவந்தான் குடிநீர் திட்டத்தை செயல்படுத்தி மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) சோழவந்தானில் 19—11—1979-ம் தேதி வைகை நதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் குடிநீர் பைப்லைன் மற்றும் அதைத் தாங்கிச் சென்ற பாலம் முதலியன அடித்துச் செல்லப்பட்டுப் பழுதடைந்துவிட்டது. அதற்குப்பிறகு மாநில மற்றும் மத்திய நிவாரணக் குழு வந்து பார்வையிட்டனர். ஆனால், மேற்படி பணிகளை வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் சேர்த்து செய்வதற்காக எந்தவிதமான எழுத்து மூல உத்தரவுகள் உறுதிகள் ஏதும் வழங்கபடவில்லை. மேலும் பணிகள் வெள்ள நிவாரண திட்டத்தில் இதுவரை செய்யப்படவில்லை.

(ஆ) சோழவந்தான் பேரூராட்சியின் தலைமைப் பணியிடத்தில் போடப்பட்டிருந்த 10 அங்குலம் விட்டமுள்ள இரும்புக் குழாய்கள் 1979ம் வருடம் நவம்பர் 19ம்தேதி வைகை ஆற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. எனவே, உடனடியாக குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, தற்காலிகமாக 4'' விட்டமுள்ள இரும்புக் குழாய்கள் மூலமாக சோழவந்தான் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குழாய்களை மாற்றி 10'' குழாய்கள் பதித்துக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்குமாம்பலம் பகுதிக்கான சாக்கடை மற்றும் குடிநீர் வசதிகள்.

*வினா எண். 331—திரு. செ. சிவசாமி : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குமாம்பலம் தெற்கு கோதண்டராமசாமி கோவில் தெரு மக்களுக்கு சாக்கடை வசதி, குடிதண்ணீர் வசதி இல்லாமலிருப்பதை அரசு அறியுமா ?

1982 மார்ச் 3]

(ஆ) ஆமெனில் அவர்கள் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஏப்ரல், 1981 முதல் அக்டோபர், 1981 வரை சென்னை மாநகரம் வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தது. இவ் வறட்சி நிலையை சமாளிக்க சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியம் இந்தப் பகுதியில் எஃகு தொட்டிகள் வைத்து லாரிகள் மூலமாக தண்ணீர் வழங்கச் செய்தது. இப்போது குடிநீர் வழங்கலில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நிரந்தர நிவாரணமாக ரெட்டிக்குப்பம் சாலையிலுள்ள குடிநீர், கழிவு நீர் குழாய்களுடன் இத்தெருவில் குடிநீர், கழிவு நீர் குழாய்களைச் சேர்க்க வேண்டும். இதற்கு தேவையான இணைப்பு கொடுக்கத் தேவைப்படும் பகுதி தனியார் ஒருவருக்குச் சொந்தமானது. இதன் உரிமையாளருக்கு நோட்டீஸ் கொடுக்க வாரியம் ஆவன செய்து வருகிறது. தொடர்ந்து சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுத்து மேற்கூறிய குழாய்களை இணைப்பினைக்கொடுத்து இப்பிரச்சினையைத் தீர்க்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, மேற்கு மாம்பலம், தெற்கு கோதண்டராமசாமி கோயில் தெருவில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிக அளவில் வாழ்வதால் அந்தச் சாக்கடையினால் பெரும் வியாதிகள் பரவும் நிலையும், அதன் காரணமாகச் சென்னை மாநகரம் முழுவதும் அந்த நோய் பரவும் நிலையும் உள்ளது. அங்கே சாக்கடை அதிகமாக இருப்பதால் அவசரச் சட்டத்தின் மூலம் அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து சாக்கடை வசதி செய்து கொடுக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுமாதிரிப் பிரச்னைகளில் அங்கிருப்பவர்கள் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பார்ப்பதில்லை. யாராக இருந்தாலும் மனிதர்கள் என்ற உணர்வில்தான் கவனிக்கப்படுகிறது. அந்த நிலத்தை விரைவில் ஆர்ஜிதம் செய்ய ஆவன செய்ய இந்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, மேற்கு மாம்பலம் மாநகராட்சியின் ஒரு பகுதி ; தலைநகரத்தில் உள்ள ஒரு பகுதி. ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம்

வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஏறக்குறைய ஏழுமாத காலமாகியும் நடவடிக்கை எடுக்க ஆலோசனைகள் நடக்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்தால் அந்தப் பகுதியிலுள்ளவர்கள் எவ்வளவு பாதிக்கப்படுவார்கள்? மாநகராட்சி துரிதமாக கவனிக்க வேண்டிய இப்படிப்பட்ட குடிதண்ணீர், சாக்கடை போன்ற விஷயங்களில் துரித நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் விசேஷமாக முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கோயில்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நினைப்பதைப் போல், அங்கே தண்ணீருக்குத் தட்டுப்பாடு இல்லாமல் இடைக்கால நிவாரணம் ஏற்பாடாகிவிட்டது. நிலையான நிவாரணமும் கிடைப்பதற்கு வேண்டிய திட்டத்தைச் சொல்லியிருக்கிறோம். அதன் பிரகாரம் நிலத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்து நடவடிக்கை எடுப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும் என்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினருக்கு உறுதி கூறிக்கொள்கிறேன்.

உதகமண்டலம் பார்சன்ஸ்வாலி குடிநீர் திட்டம்.

* வினா எண். 332—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க பார்சன்ஸ்வாலி குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): உதகமண்டலத்தை நான்கு பிரிவுகளாக பிரித்து ஒவ்வொரு பகுதியிலும், ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பகிர்மானக் குழாய்கள் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 110 லிட்டர் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்க பார்சன்ஸ்வாலி குடிநீர் திட்டத்தை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளதா